உ

கடவுள் துணை.

வடிவுடையம்மன்

ஆசிரியவிருத்தம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ

அவர்களாற்றமது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

30

உ

கடவுட்துணை.

வடிவுடையம்மன்

ஆசிரியவிருத்தம்.

சந்தரிசவுந்தரிநிரந்தரிதுரந்தரி சோதியாய்நின்
றவுமையே, சுக்கிரவாரப்பெருமையுங் கண்டுனது
சேர்வையுஞ் சொல்லவுமெளிதாகுமோ, சந்நிதியா
கியே செந்தமிழ்ப் புராணியென் சலிப்பெலாமாற்றி
யருள்வாய், சற்குணிமெற்குணிசதுர்வேதசமயமும்
மாரிநீயே,சிந்தைமிகநொந்துயான்வந்தகுறையுந்தன்
முன் செப்பவும்கேட்கவிலையோ சேய்பெற்றதில்லை
யோ நீதியுணர்விலையோ செகமெலாம் பெற்றதாயே
தந்திரமுகுந்தனிட தங்கைசிவமங்கையே தரணிபுக
ழொற்றியூர்வாழ், தங்கமலர்நாதர்சடை கங்கையுரு
வானதொடி திங்களொளிவானவடிவே. 1

மண்டலந்தன்னிலே கண்கண்டதெய்வம்நீ
மற்றுமொருதெய்வமுண்டோமந்திரப்பேய்களுந்தந்
திரச்சூனியமுமற்றுஞ் சத்ராதிபகையுங்கண்டுனது
பாதமலர்நின்றுதுதிசெய்திட கலங்கிப்பறந்தோடு

மே, குன்மமும்பிணிகளும் வன்மமில்லாமலேகண்ட வுடன் தெண்டனிடுமே, இன்றுமுதலாய்வந்த பண் டுபழிபாகமுமினிமேல்வரும் வினைகளும், எந்தன் மேல் கணக்காகசிந்தையினினைக்காம லியமனணுகா லருள்வாய், தண்டுளபமாலையணி மார்பனிடதங்கை யேதரணிபுகழொற்றியூர்வாழ்தங்கமலர்நாதர்சடை கங்கையுரு வானகொடி திங்களொளிவானவடிவே.

பாரெலாந்துதிபெற்ற பாதவிரல்மோதிரம் பா டகந்தண்டைகொலுசும், பதிந்தவிடைமீதிலணிந்த பட்டாடையும் பசும்பொன்னினொட்டியாணமும், வாரணியுமார்பினில் சரப்பளிபதக்கமும்வச்சிரம ணிதாலியழகும், வையகந்துதிபெற்ற கையினிற்கட கமும் வர்ணநிறமானகிளியும், சீரொழுகுகாதினிற் கம்மலுந்தொடுகொப்புஞ் செகமெலாம்நிறைந்தவுரு வுஞ், சித்திரவொளிபார்வையு மிரத்தினமூக்குத்தி யுஞ் செண்பகமுடித்தகுழையும், தாரணியிலுன்பெ ருமை சாற்றவெளிதாகுமோ தரணிபுகழொற்றியூர் வாழ், தங்கமலர்நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவானவடிவே. 3

தாயதுவயிற்றிலே மாயமாய்தரித்துநான் றங் கினேனங்குசிலநாள், தாரணியில்வீழ்ந்தபின் புழுதி

யில்புரண்டுத் தவிழ்ந்தடிநடந்துசிலநாள், காயமும் வடர்ந்திந்த பாரினிலுழன்றுமிக காளையாய்திரிந்து சிலநாள், காமனுல்வதங்கியே வூமைபோல்மயங்கிக் கருத்ததுமழிந்துசிலநாள், மாய்கையாலேலோக வாழ்க்கைதனைமெய்யென்றுமயங்குதென்மனதிலமமா, மாறுதபிறவிதுய ராறுயெடுக்கதா மைந்தன்சுமக்க வசமோ, தாயென்றுவுன்னைநா னம்பினேனருள்புரிவை தரணிபுகழொற்றியூர்வாழ்; தங்கமலர்நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவானவடிவே. 4

நற்செயலிலாதவுட லிச்சைபாடானசுக நற்குணமிலாதகுறைகள், நான்முகனெனும்பா தகன்செய்தகபடமோ நன்னலப்பெரியர் செய்ததவமோ, சற்சனர்களில்லாத சபையினைப்போலவே தயங்கிமிகவேயிளைத்தேன், தாயேயுன்னுதரவு ஏழைநான்செய்தபிழை தாயலாதார்பொறுப்பார், அர்ச்சனைகள் செய்துதொழு மிச்சையடியாரினு மாதரத்தொடுபுரப்பாய், அன்னையுனையல்லாது பின்னைவேறில்லையே யனுதரட்சகியல்லவோ, தற்சொரூபமாயிலகு மச்சுதன்றங்கையே தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கமலர்நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவானவடிவே. 5

நில்லாதசமுசார மாய்கையெனை வந்துதானித் தமும்வாதிக்குதே, நெஞ்சமதுபஞ்சுபோ லஞ்சுதே சஞ்சலம் நினைவிலேபெரிதாகுமோ, நல்லோரையெண்ணாமல் பொல்லாச்சினத்தினால் நடுங்கிடப்பேசவருதே, நாவிலுன்புகழையே தியானிக்கவொட்டாமல் நன்னினைவைமாற்றிவிடுதே, கல்லாதபுல்லரிடம் வல்லாண்மைபேசியே காலனுக்குள்ளாகுதே, கள்ளமனதானவிதை நல்லமனதாகிடக் கருணாகடாட்சம் வைத்து, கள்ளியென்வறுமைப்பிணி நல்லசெல்வங்களருள் தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கமலர்நாதர் சடை கங்கையுருவானகொடி திங்களொளிவானவடிவே. 6

பெற்றதாய்தந்தையும் பிறவியுமிருந்தென்ன பிள்ளைபெண்சாதியென்றும், பிரியமாய்மனிதர்க்குளுறவாயிருந்தென்ன பிராணனுக்குதவியுண்டோ, நித்தனாரிடமாக முத்திதரவேயொளிரு நீலியம்பிகைதிரிசூலி, நீங்கவொட்டாமலே தேங்குமுளமலநீக்கி நிலைபானபதவியருள்வாய், மெத்தவேநொந்துனது சிற்றடியைநம்பினேன் மிகமவுனமாயிராதே, மேதினியிலுன்னைவிட வேறுமொருதெய்வங்கள் மெய்யானதெய்வமுண்டோ, தத்திமித்தாளமொடு வருமமலர்

அதிரர்மகிழ் தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கமலர் நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவான வடிவே. 7

ஓயாதகவலைரின் தீராதவறுமையு மொழியாதவன்பிணிகளும், உலகெலாம்பகைகளு மளவிலாகன மமும் ஒருவராற்சொல்லவசமோ, பேயாகநானிந்த பீடையிற்கிக்கியே பிதற்றவும்பூமிதனிலே, பெண்களெனுமாய்கையா லங்கமனவாடியே பிர்மையால் மெய்தளர்ந்தேன்,தாயென்றுமலறியழுவேனென்று கேட்கிலாய்தருமமோவுந்தனுக்குத்; தஞ்சமென்றன்பாத நெஞ்சினில்நினைந்தோர்கள் தளர்வரோதரணிதனிலே, தாயேயிதுதர்மமோ மாயனதுதங்கையேதரணிபுகழொற்றியூர்வாழ்,தங்கமலர்நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவானவடிவே. 8

எத்தனைத்துயரமென் றியம்புவேனம்மா வெறியேன்செய் கொடுமையேதோ, இக்காயமிச்செல்வ நிலையென்றுநம்பியே யிப்படியெலாந்தளர்ந்தேன், பெற்றதாய்நீயென்று முறையிட்டுவலறிடப் பேசாதிருப்பதேனோ, பேச்சியென்றேற்குதவில் தாட்சியோவம்மணி பிள்ளைமேற்கோபமேதோ, அத்திமுகனைப்

பெற்ற நித்தியகல்யாணியே அமரர்தொழுசர்வாணியே, அறியாதசிறுவன்மேலினியாகிலுளமகிழ்ந்தன்புவைத்தருள்புரிகுவாய், கத்துமயில்வாகனனை பேற்றகௌமாரியே தாணிபுகழொற்றியூர்வாழ், தங்கமலர்நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவானவடிவே. 9

படிக்கவறியேனுனைத் துதிக்கவறியேனென்ன பாதகத்தின்கொடுமையோ, பாட்டுமறியேன்கவிதை கேட்டுமறியேன்மிக்க பாவலர்கணேசமறியேன், நடுங்கிடக்குருவடி வணங்கவறியேன்சடில நாதனடிபூசையறியேன், நான்மனிதனுருவாகி பூமியிற்சன்மித்து நலமான்செலவுமறியேன், கடல்சூழுமிவ்வுலகிலென்போலுமூடனைக் கண்டதுண்டோவருளுவாய், காமாட்சியுந்தனிட பாதமேநம்பினேன் கன்மவினையணுகாமலே, தடுத்தடிமைகொண்டெனைக் கடைத்தேறவேயருளி தாணிபுகழொற்றியூர்வாழ். தங்கமலர்நாதர்சடை கங்கையுருவான திங்களொளிவான வடிவே. 10

மண்ணினிலிருக்களவு மின்றுமுதலாகவிம் மனுவொன்று பேட்பதறியேன், மாருதசெல்வமுந்தே

ரு தகல்வியுமனுநீதிஞானவழியும்;கண்ணிலிருண்டா மல் காயமிகவாடால் கைகால்கணேகாமலே, கால னுக்கஞ்சாமல் சலியேனுமிஞ்சாமல் காதுசினம்வா ராமலே, பண்ணவேதருமமு மினியவுபகாரமும் பசி த்தபேர்க்கமுதுதரவும், பாருலகிலுந்தனிட பாதத் தைநம்பினேன் பட்சம்வைத்திரட்சியம்மா, கண்ணி தழிமாலையணி தற்பரற்கமுதமே தரணிபுகழொற்றி யூர்வாழ் தங்கமலர்நாதர்சடைகங்கையுருவானகொ டி திங்களொளிவானவடிவே. 11

வடிவுடையம்கன் ஆசிரியவிருத்தம்

முற்றிற்று.

———